**‘எண்ணமெல்லாம்’ பாக்கள்** **த.ஜெயசீலன்**

இணுவில் மண்ணின் மைந்தனும் தற்போது சுவிஸில் வாழ்ந்து வருபவருமாகிய இன்பம் அருளையா அவர்களுடைய ‘எண்ணமெல்லாம்’ எனும் கவிதை நூல் 2021 ஆம் ஆண்டு தை மாதம் வெளிவந்திருக்கின்றது. இந்நூலில் 19 மரபுக் கவிதைகள் 20 இசைப்பாடல்கள் 30 புதுக்கவிதைகள் இடம் பெற்றுள்ளன. ஈழ மண்ணில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினாலும் குடும்பச் சுமையினை சுமப்பதற்காகவும் புலம் பெயர்ந்து சென்று அந்நிய தேசத்தில் சொந்த மண்ணின் நினைவுகளோடு வேர்விட்டு வாழும் எண்ணறவர்களில் ஒருவரான இன்பம் அருளையா தனித்துவம் மிக்க கவிஞராக படைப்பாளியாக விளங்குவதனால் தாய் மண்ணின் மகிமைகளையும் தனது இளமைக்கால் நினைவுகளையும் புலம் பெயர் மண்ணின் வாழ்க்கைக் கோலங்களையும் தனது கவிதைகளில் பதிவு செய்து வருகிறார்.

இணுவில் மண் இயல்பாகவே கலைகளும் தமிழும் சமய சம்பிரதாயங்களும் செழித்தோங்க நிற்கின்ற மண். அம் மண்ணிலிருந்து பெற்ற இயல்பான ஆற்றல் இவரை ஒரு கவிஞராக மாற்றியிருக்கின்றது. இலக்கியத்தின் உயர்ந்த கலை வடிவான கவிதைத் துறையில இவருக்கு ஏற்பட்ட இயல்பான ஈடுபாடும் தமிழ் கவிதைகளில் கொண்டிருக்கும் பரீச்சயமும் இவரை ஓசை நெறிப்பட்ட மரபுக் கவிதைகளையும் புதுக்கவிதைகளையும் எழுத வைத்துள்ளது.

இதை விட தாளக்கட்டுக்களில் பயணிக்கும் இசைப்பாடல்களை ஆக்குகின்ற இவரது வல்லமையும் இவரை தனித்து இனம் காட்டுகிறது. புலம் பெயர் தேசத்திலிருந்து ஈழத்து திருத்தலங்கள் மீது இவர் எழுதிய நூற்றுக்கணக்கான இசைப் பாடல்கள் பல்வேறு இறுவெட்டுக்களில் வெளிவந்திருப்பதை அறிய முடிகிறது.

அண்மையில் வெளியிடப்பட்ட ‘வல்லிபுர மாயவா’ என்ற இறுவெட்டிலும் இவருடைய பல பாடல்கள் இடம் பெற்றிருந்ததுடன் அவ் இறுவெட்டு வெளியீட்டில் இவரை சந்திக்கக் கூடிய வாய்ப்பும் எனக்கு கிடைத்தது. தன்னுடைய வாழ் நாளை புலம்பெயர் தேசத்தில் கழித்து வருகின்ற இன்பம் அருளையா அவர்கள் ஈழ மண்ணின் போராட்ட கால நெருக்கடிகளையும் ஈழத்தவர்களால் நேரடியாக வெளிப்படுத்த முடியாத அகக்குமுறல்களையும் தன்னுடைய கவிதைகளில் கொட்டித்தீர்த்து வருகின்றார்.

இன்பம் அருளையா அவர்களுடைய கவிதைகள் மிகவும் எளிமையானவை, சாதாரண அன்றாட புழக்கத்தில் உள்ள சொற்களை கொண்டவை. ஆழ்ந்த கடுமையான இலக்கண மயப்பட்ட தத்துவார்த்த ரீதியிலான விடயங்களை பேசாமல் ஒரு சாமானியனின் எண்ணக் கோலத்தில் அவ்வப்போது வந்து போகும் விடயங்களை பேசுபவை. கவிதை இலக்கணங்களை கறாராக கைக்கொள்ள வேண்டுமென்ற மனநிலையின்றி நேரடியாக எண்ணங்களை சம்பவங்களை எடுத்துச் செல்பவை.

இவருடைய மரபுக்கவிதைகள் என்ற வகுதியின் கீழ் வருகின்ற இவரது கவிதைகள் ஒரளவு ஓசை ஒழுங்கை பேணுபவையாக, எதுகை மோனை என்பவற்றை தேவைக்கேற்ப பின்பற்றுபவையாக, தமிழின் பல்வேறு யாப்பு வடிவங்களைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளாமல் கேள்வி வழியே வருகின்ற ஓசை நயத்தை பின்பற்றுபவையாகவும் அமைந்திருக்கின்றன. உவமை, உருவகம், போன்ற அணி வகைகளையும், கற்பனை, புதிய சிந்தனை, நுட்பங்கள், உத்திமுறைகள் போன்ற கவிதையின் பொதுவான அடிப்படைகளை ஆங்காங்கே கைக்கொள்பவையாகவும் விளங்குகின்றன.

இவருடைய இசைப்பாடல்கள் இசையமைத்துப் பாடக் கூடிய வடிவ நேர்த்தியை உள்வாங்கியவை. இசைப் பாடல்களுக்குரிய அடிப்படை அம்சங்களை பேணமுயல்பவை. வெவ்வேறு கடவுள்கள் மீது அவர்களுடைய பெருமைகளையும் சிறப்புக்களையும் குறிப்புப்பொருள்களின்றி நேரடியாகப் பேசிச்செல்பவை. சில இசைப்பாடல்கள் சமூகச் சிக்கல்களையும் எளிமையான முறையிலே பேசுகின்றன.

இவருடைய புதுக்கவிதைகள் ஓசை ஒழுங்கைப் புறக்கணித்து கட்டற்ற தன்மையுடன் இயங்குகின்ற போதும் புதுக்கவிதைகளில் இன்று கைக்கொள்ளப்படும் வெவ்வேறிலும் ‘இசம்’ சார்ந்து கோட்பாடுகளையோ புதிய நுட்பங்களைப் பற்றியோ அல்லது நவீன பின் நவீன சிந்தனைகளையோ உள்வாங்காமல் அவரது மனோதர்மத்திற்கு ஏற்ப எழுதப்பட்டிருக்கின்றன. இவரின் புதுக் கவிதைகளில்

தெளிவின்மை, இருண்மை, கருத்துக் குழப்பம் என்பவற்றை காண முடியாதது ஆறுதலைத்தருகிறது.

**அணையா விளக்குகளே..** எனும் கவிதையில்
"கார் கால வானம் போல் உறங்காத விழிகளிலே
உறங்காத கனவுகளை சுமந்து சென்று துயில்வோரே
உயிர்க்கொடை தந்தவரே" என்று ஈழப் போராளிப் புதல்வர்களை வர்ணிக்கின்றார்.

**சாதனை நாயகர் எங்கே…** எனும் கவிதையில்
"சாவிற்குக் கூட அஞ்சா
அந்த சாதனை நாயகர் எங்கே?
கையிலே ஆயதம் ஏந்தி
கழுத்தொடு சாவினைச் சுமந்து
பெற்றவர் துயரம் மறைத்து
சோதரர் அன்பினைசத் தொலைத்து
புத்தகக் கல்வியைத் துறந்து

விடியலை நோக்கிய பயணம்" என்று மறைந்தாலும் மனதுகளில் மறையாத வீரர்களை நினைவு கூருகின்றார்.

**கண்ணுறங்கு ...** எனும் கவிதையில்
"வாய் திறந்து சொல்வதற்கு
ஆயிரம் உண்டு உள்ளத்தில்!
என்ன தான் செய்வதடா!
கடவுளின் நாடகத்தில்
எனக்கு ஊமை வேடமடா..!" என்று தன் கையறு நிலையை கூற முடியாது தவிக்கின்றார்.

**இனி எப்போது ...** எனும் கவிதையில்
"படலைக்கு படலை
உறவுகளின் நலன் விசாரிப்பும்
பெரியையாவின் திருப்புகழும்
அப்பாவின் மிருதங்க நாதமும்
அம்மாவின் வெந்தயக் குழம்பும்…
வீதியோர மரநிழலும்
முற்றத்து மாமரமும்"

ஆனால் இனி எப்போது????? என்று தன் சொந்த ஊர்நினைவுகனை மீட்டுப்பார்த்து கலங்குகின்றார்.

**கொஞ்சம் சிந்தி** எனும் கவிதையில்
"பதவிக்காய் நிற்கின்ற
பகல் கொள்ளைக் காரர்களால்

ஈழத்தாய் கைவிலங்கு
ஒரு போதும் உடையாது!" என்றும் எமது அரசியல்வாதிகளை ஒரு பிடி பிடித்தார். அவர்களின் தன்மை கண்டு கொதிக்கிறார். இவை அவரின் மரபுக் கவிதைகளில் சில பதச்சோறு.

**அம்மா பாடல்** எனும் இசைப் பாடலில்
"தொட்டிலிட்ட உன்னை தீயிலிட்டுப் பார்த்தேன்

அக்கணமே நானும் மரிக்கும் வரம் கேட்டேன்" என்று தாயின் பிரிவு வலியை தன் ஒத்திசைவான சொற்களில் கூறுகின்றார்.

**கற்புலத்துத் தாயவளே** எனும் இசைப் பாடலில்
"ஆலமரச் சோலையிலே அழகொழிரக் காட்சி தந்து
அருள் அள்ளித் தருகின்றாள் தாய் எங்கள் மனோன்மணி" என்று சக்தி புகழ்பாடும் அதே நேரம்

**சரவணபவ என்னும் திருமந்திரம்** எனும் இசைப் பாடலில்
"வள்ளி குறமகளின் உள்ளம் கவர்ந்தவன்!
மருதர் கதிர்காமர் முன்காட்சி கொடுத்தவர்
பூவரச மர நிழலில் கோவில் கொண்டவன்
அறுபத்தைந்து இலைகளில் சாதமேற்பவன்
வள்ளிக்கொடி படர்கையிலே மகிழ்வு கொள்பவன்" என்று சந்நிதியான் புகழையும்

**கதிர்காம கதிரமலை ஆண்டவா** எனும் இசைப் பாடலில்
"கடல் சூழ்ந்த இலங்கையிலே
கதிர்காம பதியினிலே
கதிரேசன் கோவில் கொண்டான்" என்று சந்த ஓசை பிரளாமல் கதிர்காமக்கந்தன் புகழையும் பாடிப் பரவரிக்கின்றார்.

**கண்ணீரில் விளக்கு வைத்தோம் ...** எனும் கவிதையில்
"தண்ணரிலே விளக்கெரியும்
சக்திமிகு தாயவளே
வைகாசி மாதம்
எங்கள் கண்ணீரிலே விளக்கு வைத்தும்
கண்ணகி நீயும் காக்கவில்லை" என்று நமது இறுதி யுத்த வரலாற்று அவலத்தை அருகிலிருந்து பார்த்த வற்றாப்பளையாளும் அனைவரையும் அநாதைகளாகக் கைவிட்டதை பாடி வை(த்)திருக்கின்றார்.

**சூழ்நிலைக் கைதிகள் ...** எனும் புதுக்கவிதையில்
"குளிரோடும் போராட்டம்
மொழி தெரியாத திண்டாட்டம்
'றெஸ்ரோரண்ட்' பின்னாடி
பெரும் குண்டானுக்குள் மறைவாகச்
சில காலம் உருண்டாயிற்று
வெள்ளைக்காரன் கோபப்பேச்சு
நமக்கெங்கே புரிகிறது
அதுசும் சிரிப்பாகிப் போக
ஆண்டுகளும் கடந்தாயிற்று" என்று தனது புலம் பெயர் அவலங்களையும் அனுபவங்களையும் பகிர்கின்றார்.

"பதினாறில் வெளிநாடு வந்தவனின்
வயதின்றோ வட்டுக்குள்
முழு முன் வழுக்கை வந்துவிட
நோய்களும் உறவாக
திருமணமும் செய்தாகி
இருபக்க மத்தளமாய் உறவுகளின் பிடியினிலே
வெளிநாட்டில் வாழ்பவர் சூழ்நிலைக் கைதிகளே"

என்று புலம் பெயர்ந்தவர்கள் சொர்க்க புரியில் சுதந்திர புருஷர்களாக இல்லாமல் அவர்களும் சூழ்நிலைக் கைதிகளாக தம் விருப்பு வெறுப்பு இயல்புகளைத் தொலைத்து பணம் சம்பாதிக்கும் இயந்திரங்களாக வாழும் அவலத்தையும் பதிவு செய்கின்றார்.

ஆக, ஒரு படைப்பாளியாக தன் வேறுபட்ட படைப்புக்களின் ஊடாக தனது அகப்புறக் காயங்களுக்கு ஒத்தடமிடுவதோடு வாசகர்களுக்கு தனது உணர்வைத் தொற்ற வைக்கும் இன்பம் அருளையா அவர்களின் ‘எண்ணமெல்லாம்’ எனும் கவிதை நூல் அவரின் ஆரம்ப கட்ட படைப்புக்களை ஒரு பார்வையில் பார்த்து எடைபோட எண்ணும் எவருக்கும் ஒரு உசாத்துணை நூலாக உதவும் என்பதுடன் அவரின் படைப்பியல்பை உலகுக்கு எடுத்து இயம்பும் ஆவணமாகவும் இருக்கும் எனலாம்.

மிகுந்த ஆர்வமும் புலம் பெயர்ந்து வாழும் நிலையிலும் தொடர்ந்து படைப்புக்களை அந்த அந்த சூழ்நிலைக்கு ஏற்ப படைக்க கூடிய வசதி வாய்ப்புக்களையும் அவற்றை ஊடகங்களிலும் இறுவெட்டுக்களாகவும் வெளிப்படுத்தக் கூடிய வல்லமையையும் கொண்டுள்ள இன்பம் அருளையா அவர்கள் தொடர்ந்து எமது தமிழ் கவிதை இலக்கண இலக்கியங்களின் பல்வேறு வகைகளைத் தேடிப் பயின்று பெறும் அறிவினால் தனது ஆற்றலையும் ஆளுமையையும் மேலும் வளர்த்துயர வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

2023.05.20